மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) இக்குழுவின் பரிந்துரையைப் பரிசீலித்து இதனை அமுலாக்கத் தேவையில்லை என அரசு கைவிட்டுள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ்: மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் எழுத்தர்களுக்கு எந்தவிதப் பதவி உயர்வும் இல்லை. மேலும் அவர்களுக்குத் தேர்வுநிலை வழங்காத நிலையில், மீண்டும் இந்தக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு, ஆய்வு செய்து, ஒரு நல்ல முடிவை எடுக்க மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்; அது குறித்துப் பரிசீலிக்கலாம்.

திரு. க. அறிவழகன்: ஆயிரம் மாணவர்களுக்கு மேல் பயில்கின்ற பள்ளிகளிலே வேலை பார்க்கும் உதவியாளர்கள் மிகுந்த சிரமத்திற்கிடையே பணியாற்றுகிறார்கள். ஏனென்றால் தேவையான அளவுக்கு உதவியாளர்கள் அங்கேயில்லை. அந்த நிலையில் அவர்களுக்குரிய சம்பளம் வழங்கப்பட்டால்தான், அவர்கள் ஊக்கத்தோடு பணியாற்ற முடியும். அது தவிர, ஊதியம் நிர்ணயிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கிற குழுவிடம், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் சில பரிந்துரைகளை வழங்குவது வழக்கம். இயக்குநர், துணை இயக்குநர், மற்றும் பணியாளர்களுக்கு இவ்வளவு சம்பளம் வேண்டுமென்று பரிந்துரை வழங்குகிறார்கள். அதைப் பார்த்திருக்கிறேன். அப்போது ஆசிரியர்களுக்கு என்ன சம்பளம் வழங்க வேண்டுமென்று பரிந்துரை வழங்குவார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் அது போன்ற பிரச்சினைகள் குறித்தும் பரிந்துரைகள் வழங்க அமைச்சரவர்கள் அவர்களைக் கேட்டுக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மூன்றாவது சம்பளக் கமிஷன் முன்னால் அரசு பரிந்துரைகள் செய்வது எந்த அளவுக்கு இருந்தாலும், திருப்தி தர முடியாத நிலைமைதான் இருக்கும். சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் கோரிக்கைகளை அந்தக் குழுவின் முன்னால் வைப்பதுதான் சாலச் சிறந்ததாகும்.

B. Litt. Degree Course.

*237 *Q.* THIRU. A. R. DAMODARAN (on behalf of THIRU. G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Education be pleased to state:—

(a) whether the Government have not recognized so far the B. Litt. Degree started in 1975-76, in Tamil Colleges which are affiliated to the University of Madras;

(b) if so, the reason therefor; and

(c) when the Government will recognize the same and sanction the grant?

1978 ஏப்ரல் 1]

பி. லிட். பட்டப் படிப்பு.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னைப் பல்கலைக் கழகத்தில் இணைப்புப் பெற்றுள்ள தமிழ்க் கல்லூரிகளில் 1975-76ல் தொடங்கப்பட்டுள்ள பி. லிட்., பட்டப் படிப்பிற்கு இதுகாறும் அரசு ஏற்பு அளிக்கவில்லையென்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(உ) எப்பொழுது ஏற்பு அளிக்கப்பட்டு, அதற்கான மானியம் வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) & (உ) : இதற்கு அரசுக்குக் கூடுதல் செலவு ஆகும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். அது பரிசீலனையிலுள்ளது. கூடிய விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும்.

திரு. க. அறிவழகன் : தமிழ் புலவர்களுக்கு பி. லிட்., பட்டப் படிப்பு நடத்தும் கல்லூரிகளைப் பற்றியதாகும் இந்த வினு. இதில் தங்களுக்கும் தொடர்பு உண்டு. இந்தக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டு, இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் மானிய உதவி வழங்கப்படவில்லை. மிக விரைவிலே மானியம் வழங்கினுல்தான், அந்தப் பட்டப் படிப்பைக் கொண்டு வந்ததற்கான நோக்கமே நிறைவேறும். அந்த வகையிலே அமைச்சரவர்கள் கூறியவாறு, மிக விரைவிலே ஏற்பாடுகளைச் செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைத்தான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்.

புலவர் புலமைப்பித்தன் : கடந்த மாதத்தில் இது போன்ற தமிழ்க் கல்லூரிகள் நடத்தப்படுகிற பகுதிகளுக்குச் சென்ற போது, அங்கேயிருந்த எல்லாத் தரப்பு மாணவர்களும் தமிழ் நாடு தேர்வாணைக் குழுவில் இடம் பெறுவதற்கு வாய்ப்பிருந்தால், நலமாக இருக்குமென்று சொன்னுர்கள். இது பட்டப் படிப்பு என்று அரசால் ஒத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது, எனவே தேர்வு ஆணைக் குழுவில் இடம் பெற வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டார்கள். அப்படிப்பட்ட வாய்ப்பு அளிக்க ஏதாவது பரிந்துரை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பட்டப் படிப்பாக அது அங்கீகரிக்கப் பட்டுத்தான் இப்போது பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இங்கே கேட்கப்பட்டுள்ள கேள்வி, அந்த வகுப்புகளை நடத்தும் கல்லூரிகளுக்கு மானியம் அளிப்பது குறித்ததாகும்.